# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 03.08.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 3095/SCIC/2026**

திருமதி/செல்வி.R.சுமத்ரா - மேல்முறையீட்டாளர்
டி-பிளாக், எண்.7, முதல் தளம்
கொச்சின் ஹவுஸ் காவலர் குடியிருப்பு
ஆயிரம் விளக்கு, சென்னை-600 006.
Phone:70102 94268

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
காவல் துணை ஆணையாளர்
மத்திய குற்றப்பிரிவு-2
சென்னை பெருநகரக் காவல்
வேப்பேரி, சென்னை-600 007.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **05.01.2024** |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 29.01.2024 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 02.02.2024 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 02.03.2024 |
| 5. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 10.03.2024 |
| 6. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 24.12.2024 |
| 7. | மனுதாரரின் ஆட்சேபனை மனு | 27.12.2024 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 05/01/2024 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ காவல் துணை ஆணையாளர், மத்திய குற்றப்பிரிவு, காவல் ஆணையாளர் அலுவலகம், சென்னை அவர்களுக்கு அனுப்பி, அதில் "R.சுமத்ரா மனு நாள் - தொடர்பாக - எனது மனு மீது தாங்கள் எடுத்த நடவடிக்கையின்

முழு விவரம் தகவல் அளிக்கவும்" என்பன போன்று 10 (பத்து) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (03/08/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திருமதி/செல்வி.R.சுமத்ரா அவர்கள் ஆஜராகவில்லை. எனினும், மனுதாரர் 31/07/2026 தேதியிட்டு ஆணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில், தன்னால் ஆணையத்தின் நேரடி விசாரணையில் கலந்து கொள்ள இயலவில்லை எனத் தெரிவித்துள்ளார். பொது அதிகார அமைப்பின் சார்பில் தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 8(2)-ன்படி அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக, திரு.S.சார்லஸ் சாம் இராஜதுரை, கூடுதல் துணை ஆணையாளர்-2, மத்தியக் குற்றப்பிரிவு, சென்னை பெருநகரக் காவல் ஆணையரகம், சென்னை அவர்கள் ஆஜராகி, மனுதாரருக்கு 29/01/2024, 02/03/2024 மற்றும் 24/12/2024 தேதிகளிட்ட கடிதங்கள் வாயிலாக தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர், 27/12/2024 தேதியிட்டு தனது ஆட்சேபனை மனுவினை அனுப்பியுள்ளார். **பொதுத் தகவல் அலுவலரால், மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தகவல்களை பரிசீலிக்கையில், அவை சரியானதாக இல்லை என ஆணையம் முடிவு செய்கிறது. எனவே, பொதுத் தகவல் அலுவலர்/ துணை ஆணையாளர்-2, மத்தியக் குற்றப்பிரிவு, சென்னை பெருநகரக் காவல் ஆணையரகம், சென்னை அவர்கள் மனுதாரருக்கு, ஆவணங்களின்படியான, இனம் வாரியான, சரியான பதில் / தகவல்களையும், ஆவணங்களின் நகல்களையும், இனம்-9-ல் கோரியுள்ள விசாரணை அறிக்கையின் நகலினையும் 31/08/2026-க்குள் விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பதோடு, அதன் நகலினை ஆணையத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. எனவே, மேற்குறிப்பிட்ட உத்தரவுகளுடன், இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 3095/SCIC/2026</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
காவல் துணை ஆணையாளர்
மத்திய குற்றப்பிரிவு-2
சென்னை பெருநகரக் காவல்
வேப்பேரி, சென்னை-600 007.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திருமதி/செல்வி.R.சுமித்ரா
டி-பிளாக், எண்.7, முதல் தளம்
கொச்சின் ஹவுஸ் காவலர் குடியிருப்பு
ஆயிரம் விளக்கு, சென்னை-600 006.
Phone:70102 94268

RG/Sr.PC